**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATHUR.**

**CC. No.599/2025,**

**Cr.No.453/2018**

| | | | |
|---|---|---|---|
| 1 | Deposition of Witness for | : | PW1 |
| 2 | Name | : | ராமமூர்த்தி |
| 3 | Father/Husband Name | : | கோபால் |
| 4 | Village | : | பேராம்பட்டு |
| 5 | Taluk | : | திருப்பத்தூர் |
| 6 | Calling | : | ஓட்டுநர் |
| 7 | Age | : | 54 |
| 8 | List of witness | : | Lw1 |

Solemnly by **Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur** affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 22.09.2025.

எதிரி ஆஜர் .

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 12.36 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 12.44 P.M.

<u>முதல் விசாரணை</u>:–

நான் மேற்படி முகவரியில் வசித்து தனியார் பேருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன அருணாச்சலம் எனக்கு மகன் ஆவார். கடந்த 03.11.2018 அன்று என்னுடைய மகனுக்கு மதியம் மதியம் 1:30 மணி அளவில் எனது துணிகளை அயன் செய்வதற்காக எனது மருமகன் சிங்காரவேலன் இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு மங்கத்தான் வட்டத்திலிருந்து பேராம்பட்டு நோக்கி எனது மகன் சென்றார். டாட்டா ஏசிஇ வாகனம் மோதி என் மகனுக்கு விபத்து ஏற்பட்டதாக எனக்கு தொலைபேசி மூலம் தகவல் கிடைத்தது. விபத்து அறிந்த செய்தி கேட்டவுடன் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்து என்னுடைய மகனை பார்த்தேன். நான் என் மகனை பார்ப்பதற்கு அரசு மருத்துவமனைக்குச் சென்ற உடனேயே என் மகன் இறந்து விட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். விபத்து எவ்வாறு நடந்தது என்பதை நான் விசாரித்து தெரிந்து கொண்டேன். ஆஜர் எதிரி எனக்கு ஏற்கனவே அறிமுகமான நபர். ஆஜர் எதிரி தான் விபத்து ஏற்படுத்தியதாக நான் தெரிந்து கொண்டேன். விபத்து குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் கொடுத்த புகாராகும் புகாரியில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 . வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

நீங்கள் ஓட்டுநர் வேலைதான் செய்து வருகிறீர்கள் என்றால் சரிதான். விபத்து யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்ற விவரம் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2025.09.22 17:27:27 +0530

Chief Judicial Magistrate,

Tirupathur.